Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.
விரோதிஞு (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது — தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எச] யாழ்ப்பாணம்:- சுபகிருதுஞு சித்திரைமீ உஅஉ வெள்ளிக்கிழமை (11 May. 1962) [இல-ரு]

உலகியல் அலை

# குடிவகைவிருத்திக்கு - ஈழத்துப் பாராளுமன்றத்திற் குதூகலம்!

பாராளுமன்றத்தில் மக்கள்சபையில் மதுபரிபாலனப் பகுதியாருக்குக் கொழும்பில் 'பீர்' என்ற குடிவகை உற்பத்திச்சாலை ஒன்றை அமைப்பதற்கு உத்தரவு கொடுக்கும்படி கைத்தொழில் கலாச்சார மந்திரியார் கொண்டுவந்த யோசனையில் நடந்த விவாதம் பெரும் வி..தமாயிருந்தது

குடியினல் வருங்கேடு தாங்கொணுதது. கொலை, களவு, காமம் என்றவகையில் உள்ள மாபாதகங்களுக்கும் கள்ளும் இதர மது பானமும் காரணம் என்று இந்நாட்டில் நடக்கும் கவலைக்கிடமான குற்ற நிகழ்ச்சிகள் நாளுக்குநாள் எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கவும் எவ்வாறு புதுப் புது மதுப்பொருள் உண்டு பண்ணலாம் என்று கலாசசாரப்பகுதிக்கும் மந்திரியாகவிருக்கும் கைத்தொழில் மந்திரியார் யோசனை கூறியதுசிரிப்புக்கிடமாகின்றது.

கைத்தொழில் அபிவிருத்தி உள்நாட்டு நிர்வாகம் என்றவகையில் அமைச்சு நடத்தும்பொழுது மதுவைப்பெருக்குவதும் கலாச்சாரம் என்ற நிலையில் அமைச்சு நடத்தும்பொழுது மதுபானம் பெரும் ஈனம் என்று சொற்பெருக்காற்றுவதும் நாடக நடிப்பு முறையில் இருக்கின்றன.

ஈழத்துள்ள சமயங்கள் யாவும் மது பெரும பாதகத்துக்கடிப்படையான பொருள் என்று விரிவாக எடுத்துக் கூறியிருக்கவும் கலாச்சாரத்தையும் மக்கள் நல்வாழ்வையும் கருதும பாராளுமன்றத்து அங்கத்தவர்கள் குடிவகையைநிலைபெறச் செய்வதற்கு வழி வகை எடுப்பது விபரீதமாகின்றது.

வடபகுதியிலுள்ளார் கள்ளை இல்லாதொழிக்க முயற்சி செய்யும் வேளையில் அதைப் பகுவப்படுத்தி ஏனைய பாகங்களுக்கும் கிடைக்கச் செய்வதற்கும் ஆலோசனை கூறப்பட்டது. முன்னேற்றம் முற்போக்கு என்று சொல்வது மக்கள சமய உண்மைகளை மறகக்செய்வதற்கு வழிகாட்டியாயிருக்கின் இத தேசத்தின் எதிர்காலம் எவ்வாறிருக்குமோ யாரறிவார்?

## செங்குந்த இந்துக்கல்லூரி

இவ்வாண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் நடாத்திய புகுமுகத்தேர்வில் மூதல் முறையாக செங்குந்த இந்துக்கல்லூரியி லிருந்து க. பராசசிங்கம், கமலா தேவி, கோமளாதேவியாகியோர் தெரிவு செய்யப் பெற்றுள்ளனர்.

## தெல்லி துர்க்கையம்மன் கோயிற் றிருப்பணி

மிகப் பழையதும் இலங்கையிலே துர்க்காதேவி எழுந்தருளிய ஒரே ஒரு ஆலயமுமாகிய தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோயிற் றிருப்பணிச் சபையார், சென்ற சனி ஞாயிறு திங்கள் ஆகிய மூன்று நாட்களிலும் பிரசாரக் கூட்டம் நடத்தினர். வித்தியாதரிசியாயிருந்து ஓய்வெடுததிருக்கும் திரு.செ. தியாகராசா, வைத்தீஸ்வரவித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன், இந்துசாதன ஆசிரியர் திரு. நம. சிவப்பிரகாசம் ஆகியோர் தலைமையில் இக்கூட்டங்கள் நிகழ்ந்தன. சைவப் பெரியார் திரு, மு, ஞானப்பிரகாசம், சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, ஆசிரியர் வ. ஆறுமுகம் இன்னும் பலரும் சொற்பெருக்காற்றித் திருப்பணிச் சபைக்கு ஆதரவு தேட மக்களை ஊக்குவித்தனர்.

## துறவிக்கு வேந்தன் துரும்பு!



பெரியவர்: நிலைமை மிக மோசமாகின்றதே! தலையாரியையும் களவாடுவதென்ருல் யார்தான் தப்பலாம்...? பிரதமரின் மகள் கடையில் விலைக்குப் பெற்ற ஆடைகளைக் கள்வன் கவர்ந்து விட்டாணுமே! அதுவும் பட்டப் பகலிலே புறக்கோட்டையிலே!

விகடன்: துறவிக்கு வேந்தன் துரும்புதெரியாதா! திருடனுக்குப் பிரதமருஞ் சரி மறுபெயரும் சரி, தெரியாதா......?

பெரியவர்: ஓகோ நல்லவழியைத் துறந்தவன் என்றபடியால் கள்வனைத் துறவியென்று கூறுகின்ருயோ?

## நற் சிந்தனை

உள்ளமே கோயில்
உயிரே சிவலிங்கம்
வள்ளலுக்கென்றே வழுத்து.

## கட்டிட நிதிக்காக நாடகம்

யாழ். ஈழத்தமிழ் மன்றத்து இளைஞர்கள் வாசிகசாலைக் கட்டிட நிதிக்குப் பணம்திரட்டும் நோக்கமாக "சோதியின் ஆலயம்" என்னும் சமூக சீர்திருத்த நாடகம் ஒன்றினை 12-5-62சனிக்கிழமை(நாளை) மாலை நடாத்தவிருக்கிறுர்கள்.

ஈழத் தமிழ்மன்றம் அளிக்கும் இந்த நாடகம் நல்லூர் ஆடியபாதவீதியிலுள்ள ஸ்ரீ வாலையம்மன்கோவில் முன்றிலில் நிகழவிருக்கிறது. —ந. நி

எல்லா வுலகமு மானுய் நீயே ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே ஞானச் சுடர்விளக்காய் நின்று நீ...
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே புகழ்ச் சேவடி யென்மேல் வைத்தாய் நீ...
செல்வாய செல்வம் தருவாய் நீயே திருவையா றகலாத செம்பொற் சோதி.

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச்சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோகமாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

## வேலணையில் நடைபெறும் 10-வது திருக்குறள் மாநாடு

தமிழ்மறைக்கழகம் ஆண்டு தோறும் ஒவ்வோர் ஊரில் நடத்தும் திருககுறள் மாநாடு இவ்வாண்டில் இம்மாதம் 18, 19, 20 ஆம் நாள்களில் வேலணையில் நடைபெறும். இந்தப் பத்தாவது மாநாட்டை இதுவரை இலங்கையில் நடைபெற்ற திருக்குறள் மாநாடுகள் எல்லாவற்றிலும் சிறந்ததாக நடத்துவதற்கு வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கத்தினர் பெருமுயற்சி செய்கின்றனர்.

1-ம் நாள், பேராசிரியர் சின்னத்தம்பி, பண்டிதர் கா. பொ. இரத்தினம், இந்தியாவிலிருக்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## தமிழரசர் காலமும் தலைநகரும்

(முற்றொடர் 2)

### தலைநகரம் யாது?

பெருங்கடற் சமீபமும், சிறந்த துறைமுகப்பொலிவுங் கொண்டது வல்லிபுரமே ஆங்கு நற்றுறையுண்டோ என இராசநாயக முதலியார் கொண்ட ஐயுறவு எம்மால் இனிது தீர்க்கப்பட்டது வல்லிபுரத்துக்கு நேரேயுள்ள கடலோரம் பண்டை நாள் தொட்டுக் குடாக்கரையென் றழைக்கப்படுதலையும், வெருகமுனைக்கும் கொட்டோடைக்கும் இடைப்பட்ட வில்வளைவான அக்கரை ஒருகாலம் மிகச் சேமமான ஒதுங்கு குடாவாகத் திகழ்ந்தமையையும், கரையிலேற்பட்ட பழைய வாய்க்காலொன்று கொண்டுபோய் வீழ்த்திய மணற்குவியலால் அதன் வாயிற் களங்களுண்டுபட்டமையையும், பண்டைக் காலத்திலும் இன்றைக்கும் மரக்கலங்கள் கச்சான் ஒதுக்கைநாடி அவ்வப்போது இக்குடாவில் நிறுத்தப்படுகின்றமையையும் நாம் நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டோம்.

(யா. வை. வி. பக். 67—68

ஆகையால் வல்லிபுரத்தில்தான் சிங்கைநகர் உண்டாயிருந்ததென்னும் முடிபில் தனக்கெவ்வித ஐயப்பாடுமில்லை என்று வண. சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் சொல்லுகிருர்கள். அவர்கள் இக்குறிப்பை அதாவது மேலே காட்டிய இக்கருத்தை கி.பி. 1928-ல் வெளியிட்டார்கள்.

இனி, "சங்கிலி நாடக" காரர் கூற்றைக் கவனிப்பாம். திருவாளர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் அந்நூலை கி.பி. 1956-ல் வெளியிட்டார்கள். நல்லூர்த் தமிழரசர் தொடர்பில் உள்ளதாகக் கருதப்படுவதும் இப்பொழுதும் அந்நகர் எல்லையில் இருப்பதுமான வாயில் முகப்புக்கட்டிடத்தை அந்நூல் முகப்பில் பதித்துக் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது, நிற்க, இவர்கள் இச்சிங்கைத் தலைநகரைப்பற்றிக் குறிப்பிடுபவையாவன:

1. "வடபகுதியில் வலிமையொடு விளங்கிய உக்கிரசிங்கன் வடபகுதியில் உள்ள தலைவர்களையெல்லாம் அடக்கியபின் மாற்ருர் கைக்கு இலகுவில் படக்கூடிய கடற்கரைப்பட்டினமாகிய சிங்கை நகரைத் தன் தலைநகராகக் கொள்ளாது, அங்கிருந்து வெளியேறிப் பாதுகாக்கக் கூடியதும், மாற்ருர் கைக்கு எளிதில் அகப்பட முடியாததும், நிலப்பரப்பினுல் சூழப்பட்டதும், பழைய நாகர் தலைநகராயிருந்ததுமான கதிரோடை என்னும் நகரத்தி

தொடர்ச்சி 4ம் பக்கம்)

## மண்ணும்பொருளும் வாரிப்பயனேது!

★

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம்: சகாணு. — தாளம்: ஆதி.

பல்லவி

பலன் பெற வழி தேடு — நெஞ்சே
பவவினை வேரற பரமனை நாடு.

அநுபல்லவி

குலம்பண மென்றுவியா குலம்பல கண்டனை
குரங்கும னம்படைத்துக் குறைபல கொண்டனை

சரணம்

உண்ணும் பொழுதுணவின் உருசிசு வைக்காது
ஓடிஓடி வௌவாலாய் உழைத்தனை சலிக்காது
மண்ணும் பொருளுமென்று வாரிஉய் பயனேது
மரணம வரும்போதிவை வருமோ சிந்தித்தோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சுபகிருது ஸு சித்திரை மீ
உவ உ வெள்ளிக்கிழமை

## பாரதத்தின் சீரிய தலைவர்

கலாநிதி ச. இராதாகிருஷ்ணன் அவர்கள் பாரத நாட்டின் தலைவராகத் தெரிவு செய்யப்பெற்றமை அந்நாட்டின் பெருமைக்கு ஒரு பேரணியாக உலக மக்களாற் கருதிப் பாராட்டப்பெறும் என்பதற்காட்சேபமே யில்லை. காந்திப் பெரியாரின் கண்ணியமான அரசியற் பண்பில் அமைந்து விடுதலை அடைந்த பாரதநாடு பலப்பல பேரறிஞர்களால் வழி நடத்தப் பெற்று வருகின்றது.

அன்பின் உருவாக அமைந்த கலாநிதி பிரசாத் தவர்கள் உடல்நலங் கருதி ஒய்வு பெற்றுக்கொள்ள அப் பெரும் பதவியில் உலக அறிவுத் திலகமாக விளங்கும் கலாநிதி இராதாகிருஷ்ணன் அவர்கள் அமைவது பாரதப் பாரம்பரியத்துக்கு எடுத்துக்காட்டாய் இருக்கும்.

சமய உண்மைகளையும் தத்துவங்களையும் தக்கவாறு ஆராய்ந்து அக்கலையின் பெரும்புலவனாக இலங்கும் கலாநிதி அவர்கள் பாரதத் தலைமைப்பீடத்தில் வீற்றிருப்பது இந்தியச்சால்பின் எழிலைப் புலப்படுத்துவதாகும். முடிமன்னர் காலம் போய்க் குடிமன்னர் ஆட்சி தோன்றியபின் பாரதத்தின் அடிப்படைப் பண்பின் சிகரமாக மக்களின் மாபெருந்தலைவராக அமைந்தவர்கள் உலக நிலைமை நலம்பொருந்திச் சீர்பெற உதார புருடர்களாக உழைத்துவருவது மனித குலத்தின் தவப்பயனேயாகும். அரசன் எவ்வழி அவ்வழி மக்கள் என்பது ஆன்றோருரை. தலைவர்களாய் உள்ளவர்கள் கல்வி அறிவு, ஒழுக்கம், இறைவழிபாடு என்ற பண்புள்ளவர்களாயிருப்பின் நாடு நற்றவ நாடாய் விளங்குமென்பது திண்ணம், ஆட்சி புரிவது அரசியல் நுண்ணறிவால் அமையும் என்று எண்ணுவது பிழை. கல்விப் பயன் கருத்தில் அமைந்து செயலிற் செம்மையாக உள்ள பேர்களே ஆளும் வழியை அறியக்கூடியவர்கள். பாரதநாடு பெற்ற பாக்கியம்போல ஏனைய தேசங்களிலும் சீரிய தலைவர்கள் அமைவார்களேயானால் அமைதியும் நீதியும் அவனியில் நிலவுமென்பதற்கையமின்று.

—:—

## அருளம்பலமவர்களின் அரிய வாழ்க்கை

—————0—————

முற்றேடர்—3.

அருளம்பலம் அவர்களுடைய வாழ்க்கைச் சிறப்புக்கு இவருடைய பிதாவழியிலும் மாதா வழியிலுமுள்ள முன்னோர்களுடைய தவமும் மூலகாரணமாகவுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீலஸ்ரீ, ஆறுமுகநாவலர் அவர்கள் தமது பிரபந்தத்திரட்டில் இவருடைய கொப்பாட்டன் அருளம்பல முதலியாருடைய பொதுநலத் தொண்டையும் சமயத்தொண்டையும் பரோபகாரத்தையும் பாராட்டி யெழுதியுள்ள ஒரு பாகத்தைக் கீழே தருகின்றேன்.

**நாவலர் கூற்று**

"தமிழரசர் காலந் தொடங்கி இதுகாறும், உயர்குடிப்பிறப்புப் பரம்பரைச் செல்வம் கல்வித் திறமை, அதிகாரம், லோகோபகாரமுயற்சி, நற்குணம் என்னும் எல்லாவற்றிலும் எத்துணைப் பிரபுக்களாலும் முதன்மரியாதை செய்யப்படும் வமிசத்தவர் உடுப்பிட்டியிலே ஒரு வித்தியாசாலை தாபித்துத் தமிழ் இங்கிலிசு வைத்தியம் முதலியன கற்பிக்குமாறு செய்து பற்பல பிள்ளைகளைத் திருத்தியும் வியாதியாளர்களுக்குத் தரும வைத்தியஞ் செய்வித்துங் கிரிதீபம்போல வாழ்ந்த மகாப்பிரபுவாகிய அருளம்பல முதலியார்".

அருளம்பலம் அவர்கள் இலங்கையின் கூட்டுறவு இயக்கத்துக்கு ஓர் அச்சாணி

"காவோலை"

யாக விருந்தார். இவருடைய பிரிவினால் இவ்வியக்கம் மணியை இழந்த நாகத்தைப் போலத் தவிக்கக்கூடியதாகவிருக்கின்றது. இவர் கூட்டுறவு இயக்கத்துக்கு மெய் வருத்தம் பாராது, பசிநோக்காது அல்லும் பகலும் உழைத்தார், இங்ஙனம் இவர் ஆற்றிய தொண்டின் பெருமையை யாவரும் நன்றியறிதலுடன் பாராட்டுகின்றனர்.

அருளம்பலம் அவர்களைப் போன்ற ஒரு சான்றோனை இனி நாங்கள் இலகுவாகக் காணமுடியாது. ஓர் ஆங்கிலக்கவிஞன் ஒரு சான்றோன் இலக்கணத்தை இவ்விதமாகக் கூறுகின்றார்.

"இவன் வாழ்க்கை தண்ணளியுடையது இவனிடத்தில் இயற்கைப்பண்புகள் சிறப்பாகப் பொருந்தின. அக்காரணங்களினால் இயற்கையன்னை உலகத்தைப் பார்த்து இவனே மனிதன் என்று அறைகூவுகின்றாள்." மேலே காட்டிய கூற்றுக்கு அருளம்பலம் மிகப் பொருத்தமானவர்.

திருவள்ளுவநாயனாருடைய திருக்குறள் இவருக்கு வேதம். இவருக்குத் திருக்குறளில் அளவிறந்த ஆர்வம். பிற நாடுகளுக்குச் சென்றிருந்த காலங்களில் திருக்குறளின் பெருமையைப்பற்றிக் கூட்டங்களிலும் கல்வி நிலையங்களிலும் பிரசாரஞ் செய்திருக்கின்றார். திருக்குறளே இவர் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவிருந்தது. இவருடைய பூதவுடம்பு அழிந்தாலும் புகழுடம்பு என்றும் அழியாது. ——

## கருணை வெள்ளம் பொங்கும் அருணகிரி பாடல்கள்

"நல்லவர்களுடன் கூடும்போது நல்லதை நாடுகின்றோம்; அல்லவர்களுடன் கூடும்போது கெட்டவற்றை நாடுகின்றோம். எனவே நல்லவர்களுடன் கூடிப் பழகவேண்டும்."

இவ்வாறு கலைமகள் ஆசிரியர் வித்துவான் கி. வா. ஜகந்நாதன் காரம்பன் சைவமகாசபைக் கூட்டத்தில் "கந்தர் அனுபூதி" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றுகையில் கூறினர்.

கரம்பன் மேற்கு முருகமூர்த்தி கோவில் மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு ஈழநாடு ஆசிரியர் திரு. கே.பி. அரன் தலைமை வகித்தார். பண்டிதர் சோ. தியாகராசா வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு ஜெகந்நாதன் மேலும் பேசுகையில் "தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெறுவதற்காக அருணகிரிநாதர் கந்தர் அனுபூதியைப் பாடினர். அவரது பாடல்களில் கருணை வெள்ளத்தை நாம் காணலாம். இறைவனிடத்தில் தூய அன்பினால் எவன் உருகுகின்றானே அவனே பத்தனுவான. முதலில் நெஞ்சு நெகிழவேண்டும். அப்புறம் உருக்க நிலை தானகவே ஏற்படும். முக்தநிலைக்கு உருக்க நிலை அவசியமானது. ஆதலால் நெஞ்சு நெகிழ்ந்து உருக்க நிலை ஏற்படவும் முக்தி நிலையடையவும், நெஞ்சம் நெகிழ்ந்து மனம் உருகிப் படியுங்கள். நல்லவர்களாக, பக்தர்களாக வாழலாம்.' எனக்குறிப்பிட்டார்.

"சித்தாந்தம்" ஆசிரியர் புலவர் ந. ரா. முருகவேள் பேசுகையில் நமது உடம்பைபபற்றிச் சிந்திக்கும் போதும், இயற்கையை உணரும்போதும் இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்ற உணர்வு எழுகின்றது. இவற்றையெல்லாம் இயக்க ஒருவன் இருக்கின்றான் என்ற நம்பிக்கையும் நமக்கு ஏற்படுகின்றது. ஆதலால் நம்மிடையே கடவுள் நம்பிக்கை இருக்க வேண்டும் எனக் கூறினர்.

சபைச் செயலாளர் திரு ச. சுப்பையா அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது. கூட்டத்திற்குப் பெருந்திரளாக ஆண்களும் பெண்களும் வந்திருந்தனர். ——

இன்னலின் வருகைகள் நீ இறைவன்பால் வைத்திருக்கும் [illegible] ஆக்கும். —சுவாமி சிவானந்தா.

## இலக்கிய வளம் மலிந்த அப்பரின் பதிகங்கள்

சைவ சமயம் வளர்ச்சி குன்றி இருந்த 7-ம் நூற்றாண்டில் தோன்றி 4900ம் தேவாரத் திருப்பதிகங்களைப் பாடி சைவசமயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் திருநாவுக்கரசு சுவாமிகள்.

சமண சமயத்தை தழுவி இருந்த சுவாமிகள் சூலநோயுற்றகாலை "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்ற அடிகளை முதற்கொண்ட தேவாரத்தை முதற்கொண்டு அவர் பாடிய தேவாரங்கள் அனைத்திலுமே இலக்கியவளம் மலிந்திருக்கின்றது. "நாமார்க்குங்குடியல்லோம்" என்ற தேவாரம் துன்பத்தைக் கண்டவிடத்து அச்சமில்லை என்ற வீரத்தையும் கடவுள் நம்பிக்கையில் இருக்க வேண்டிய உறுதிப்பாட்டையும் சிறந்த அரசியல் தத்துவத்தையும் எடுத்துக் காட்டுகிறது. பிறருக்காகப்போடும் போலி வேசங்களையும், புகழ்ச்சிக்குச்செய்யும் காரியங்களையும் கடமை என்று செய்யும் மூட நம்பிக்கைகளையும் அவர் வெறுத்தார் என்பது அவர்பாடிய "ஒடு தீர்த்தம் கலந்து குளித்து அவையாடினுலும்" என்ற தேவாரத்தில் இருந்து புலனாகின்றது என்று கண்டி மூஸ்லீம் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, விரிவுரையாசிரியர் திருவாளர் கோணமலை கோணேசபிள்ளை அவர்கள் 29-4-62 ஞாயிறு மாலை மத்திய மாகாணச் சைவ மகாசபை, கண்டி, நடத்திய திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசையின்போது நிகழ்த்திய இலக்கியச்சுவையும் ஆராய்ச்சிவளமும்நிறைந்த 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற சொற்பொழிவின் போது குறிப்பிட்டார்.

மேற்படி குருபூசை கொழும்பு வீதி வடக்கு, திருகோணமலை வீதியில் உள்ள சைவ வர்த்தகர்கள் உபயமாக நடைபெற்றபோது ஆராதனையும் பிரசாதம் வழங்கலும் இடம்பெற்றன.

x x x

**தெல்லிப்பழையில்**

ஷை குருபூசை 29-4-62 ஞாயிற்றுக்கிழமை மாலை, காசி விநாயகராலய மண்டபத்தில் பாலர் ஞானோதய சபை மாணவர்களால் சபைத்தலைவர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

**நேயர்கள் நெஞ்சம்**

## அநுட்டான முறையான சமயக்கல்வி

—————0—————

சென்ற 27-4-62 வண்ணார் பண்ணை நாவலர் சைவப்பிரகாசவித்தியாசாலையில் அகில இலங்கைச் சைவப் புலவர் சமயக் கல்வி மகாநாடு சிறப்பாக நடைபெற்றது. வடமாகாண உதவிவித்தியாதிகாரி திரு. சி. உ, சோமசேகரம் அவர்கள் திரு. கி. வா, ஜகந்நாதன் அவர்கள் திரு. ந, ரா. முருகவேள் அவர்கள் திரு K.P ஹரன் அவர்கள் முதலிய அறிஞர்கள் மகாநாட்டில் விரிவுரைகள் நிகழ்த்தினர்கள், திரு. K. P. ஹரன் அவர்கள் விரிவுரை நிகழ்த்தும்பொழுது உதவி வித்தியாதிகாரிக்கு ஒரு விண்ணப்பம் சமர்ப்பித்தார்கள். சமயக்கல்வி வெறும் புத்தகப் படிப்புடன் அமைந்துவிட்டால் அது மாணவர்களுக்கு வேண்டிய நன்மையைப் பயக்காது. சமயக் கல்விக்குச்சாதனையின் நியமையாதது. மாணவர்கள் சமய தீட்சை பெற்றுத் தினமுஞ் சந்தியாவந்தனம் புரிந்து பஞ்சாட்சர செபம் செய்யவேண்டும், பஞ்சாட்சரம் மந்திரங்களுள் சிறந்தது. நான்கு வேதங்களுடைய மெய்ப் பொருளாகவுள்ளது ஓதுகின்றவர்கள் இம்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் பெறுவார்கள். ஞானமடைதற்கு அதனிலும் பார்க்க மேலான சாதனமொன்றுமில்லை, ஆகையினால் உதவி வித்தியாதிபதியவர்கள் வித்தியாசாலைகளில் கல்வி பயிலும் சைவ மாணவர்கள் சமயதீட்சை பெறவேண்டுமென்ற ஒரு நிபந்தனையை ஆக்கித்தருவார்களானல் அது சைவசமய வளர்ச்சிக்கு உறுதுணையாகவிருக்கும். இதனோடு வித்தியாசாலைகளில் கல்விகற்பிக்கும் சைவாசிரியர்களும் சமயதீட்சை பெற்று, சமயா நுட்டானம்புரிந்துவரக் கூடிய ஒழுங்கையும் அவர் செய்துதரவேண்டும்.

திரு. ஹரன் அவர்களுடைய விண்ணப்பம் சிறந்தது. அதனை உதவி வித்தியாதிகாரி அவர்கள் சிந்தித்து அதனை நடைமுறைக்குக்கொண்டுவர அவருக்கு எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவாராக.

மூ. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம் 10-5-62.

## சமய தீட்சை

அ. இ. பொ. சே. சங்கத்தின் நன்முயற்சி

"குரு, லிங்கம், சங்கமம் ஆகிய மூவகைக குறிக்கோள்களையும் கடைப்பிடிப்பவரே உண்மைச் சைவசமயி. ஆகையாற்றான் அகில இலங்கைப் பொதுஜன சேவைச்சங்கசமயப்பிரசார சபை இவ்விலவச தீட்சையையும் சமயப் பிரசாரத்தையும் நடாத்திவருகின்றது. இதன் தலைவர் முத்தமிழ்மணி, செந்தமிழ்த்திலகம் C. S. S. மணிபாகவதர் இதே நேரத்தில் மலாய்நாட்டிற் சமயப் பிரசாரஞ் செய்து அங்கும் இவ்வித நடவடிக்கைகளை நிலைநாட்டி வருகின்றார். அன்னார் ஆடிமீ பிற்பகுதியில் இலங்கை திரும்புவார். இலங்கையில் எப்பகுதியில் இவ்விலவச தீட்சையைப் பெற மக்கள் விரும்புகின்றனரோ அவ்விடம் வந்து இவ்வரிய தொண்டைச் செய்ய இச்சபை முன்வந்திருக்கின்றது" என்று கூறி, தீட்சைபெற்ற ஐம்பதின்மருக்கும் 'நித்திய கருமவிதி''ப் புத்தகங்களையும் இச்சபையின் நான்காவது இலவச சமய தீட்சையின் போது காரியதரிசி திரு. த. இராசரத்தினம் இலவசமாக வழங்கினர்.

இவ்விலவச தீட்சையைப் பல விடங்களிலும் நடாத்த முன்வந்த ஸ்ரீ. இ. ஞானசேகரககுருக்களின் அரிய சேவையையும் பாராட்டி அன்னார்க்கு நன்றி தெரிவித்தார்.

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்றவிடமெல்லாம் சீரியசைவப் பணி புரிந்த பெரியார்

——:0:——

"இவ்விழா சித்திரைத்திங்கள் 21-ம் நாள் (4-5 62) வெள்ளிக்கிழமை 5 மணியளவில் சைவபரிபாலனசபை நாவலர் நினைவு ஆச்சிரம மண்டபத்தில் சபைத்தலைவர் திரு. த. மூத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

சபையின் சமயப்பிரசார அமைச்சர் திரு மு. மயில்வாகனம் அவர்கள் பின்வருமாறு வரவேற்புரை கூறினுர்: சைவமுந் தமிழும் தமிழ் மக்களுடைய விலைமதித்தற்கரிய செல்வங்கள். அவற்றை நாங்கள் எங்கள் உயிரினும் மேலாக மதித்துப் பேண வேண்டும். பண்டிதர் வ. மு. இரத்தினேசுவரஐயர் அவர்கள் கந்தரோடையிலே வரதராசப்புலவர் மரபிலே தோன்றியவர். நாவலர்பெருமான் மரபிலே சுன்னுகம் குமாரசுவாமிப்புலவரிடத்தில் கல்வி கற்றவர். ஐயரவர்கள் இலக்கியக் கருத்துக்களையும் சைவ நூற் கருத்துக்களையும் திறம்பட எழுத்துமூலமும் பேச்சு மூலமும் வெளியிடும் ஆற்றல் படைத்தவர், பரமேஸ்வரக் கல்லூரியில் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு சைவமகாநாட்டுக்கு ஐயர் அவர்களுடன் யானும் சென்றிருந்தேன். மகாநாட்டுக்கு இந்தியாவிலிருந்து வரவேண்டிய ஒரு அறிஞர் வரத்தவறிவிட்டார். அவர் பேசவேண்டிய விஷயம் "ஞானசம்பந்தர் அருள் வீறு". மகாநாட்டு நிருவாகிகள் தயங்கினுர்கள். உடனே ஐயரவர்களை மேற்படி விஷயத்தைப்பற்றிப்பேச ஒழுங்கு செய்தார்கள். 1½ மணி நேரம் குறித்த விஷயத்தைப்பற்றிச் சொற்சோர்விலலாமல் சிறந்த சைவ சித்தாந்தக் கருத்துக்களடங்கிய விரிவுரை நிகழ்த்தினுர்கள், ஐயரவர்களை ஆதரிப்பது சைவத்தையும் தமிழையும் விருத்தி செய்யும் தொண்டாகும்.

நீண்டகாலம் செட்டியார்கள் வசிக்கும் காரைக்குடி முதலிய இடங்களில் தமிழ்ப் பணி செய்தமையால் ஆங்குள்ள பிரமுகர்கள் இன்னும் அவரிடமன்பாயிருக்கிறது பாராட்டற்குரியது".

"ஈழநாட்டிலும் இந்தியாவிலும் பர்மாவிலும் நீண்டகாலம் சைவத்தொண்டும் தமிழ் மொழித் தொண்டும் ஆற்றிய ஐயரவர்களைப் பாராட்டிக் கௌரவிக்க வேண்டியது தமிழ் மக்களுடைய கடமையாகும், முற்காலத்தில் தமிழ் மன்னர்கள் புலவர்களைப் பாராட்டி ஆதரித்தார்கள். இக்காலம் அக்கடமையையாற்றுவதற்கு மன்னர்களில்லை. பொது மக்களே அதனைப் புரிய வேண்டும், சைவபரிபாலன சபை பொதுமக்கள் சார்பாக அக்கடமையையாற்ற முன்வந்துள்ளது. ஐயரவர்கள் எங்கள் சபைக்குச் சென்ற 12 வருடகாலம் சமயத்தொண்டுபுரிந்து வருகின்ருர் எனத் தலைவர் அவர்கள் கூறி ஐயரவர்களுக்குப் பொன்னுடை போர்த்திப் பொற்கிழி வழங்கினுர்.

ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் திரு. K. P. ஹரன் அவர்கள் ஐயரவர்களுடைய பாராட்டு விழாவில் கலந்து கொள்வது மிக மகிழ்ச்சியைத் தருவதாகவும், ஐயரவர்கள் வயது முதிர்ந்தபொழுதும் இளமையும் ஊக்கமும் உள்ள மனமுடையவரெனவும், ஐயரவர்களைப்போன்ற பெரியார்களைப் பாராட்டுவது தமிழ் சைவம் ஆகிய இரண்டும் வளர்தற்கு உறுதுணையாகவிருக்குமெனவும் கூறினுர்.

சுன்னுகம் குமாரசுவாமிப் புலவருடைய சிரேட்ட குமாரன் திரு. கு. அம்பலவாணபிள்ளை அவர்கள் வரதராசப் புலவருடைய வரலாற்றை விரிவாகக்கூறி, ஐயரவர்கள் தமது பிதாவினிடம் வண்ணுர்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்விகற்றவரலாற்றையும் விளக்கினுர், ஐயர் அவர்களுடைய 60-ம் ஆண்டு விழா செட்டி நாட்டில் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் தலைமையில் நடத்தப்பட்டது. அவரது 70-ம் ஆண்டு விழா அவர் இலங்கைக்கு வந்தபின் உடுவில் கந்தசுவாமி கோயிலில் 1952-ம் ஆண்டு நடைபெற்றது. இன்று அவருடைய 80-ம் ஆண்டாரம்ப விழா சைவபரிபாலனசபை யாதரவில் நடைபெறுகின்றமை மகிழ்ச்சியையளிக்கின்றது. ஐயர் அவர்கள் கல்வி அறிவு ஒழுக்கம் ஆசாரம் நிரம்பியவர் எனவும் கூறினுர்.

உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் அவர்கள் பின்பு பாராட்டுரை கூறினுர். தமிழ்மொழிமூலம் H. S. C. வகுப்புகளுக்குச் சரித்திரம் படிப்பிப்பதைத்தான் அவதானித்து வருவதாகவும் அப்பாடத்தைத் திறமையாகப் படிப்பிப்பதற்குத் தமிழ் மொழியில் பொருத்தமான உயர்தரப் புத்தகங்கள் பெற முடியாதிருப்பது பெருங்குறையாகவிருக்கிறதெனவும், அக்குறையை நீக்க தமிழ்ப் புலவர்கள் முன்வரவேண்டுமெனவும் கூறினுர், ஐயரவர்களைச் சைவபரிபாலன சபையார் ஆச்சிரம மடத்தில் நிரந்தர ஆசிரியராக நியமித்து மாணவர்களுக்கு சைவசமய நூல்களைக் கற்பிக்க ஒழுங்கு செய்தல் பெரும் நன்மையைப் பயக்குமெனவும் கூறினுர் பண்டைக்காலத்தில் குரு சிஷ்ய முறையில் இளைஞர்களுக்குக் கல்வி கற்பிக்கப்பட்டது. ஐயரவர்கள் அம்முறையினைப் பின்பற்றிக் கல்வி கற்பிக்கக்கூடியதாக விருக்குமெனவும் கூறினுர்.

பின்பு சித்தாந்த அறிஞர் திரு. வே கந்தையா அவர்கள் ஐயரவர்கள் ஞான நூல்களைத் தாம் கற்றும் பிறருக்கும் கற்பித்து ஞானப்பூசையினை நடத்திவருகின்ருரெனவும் அவருடைய தொண்டுகளைத் தமிழ்மக்கள் மதித்து அவருக்கு உதவிபுரிய வேண்டுமெனவும் கூறினுர்.

பண்டிதர் வித்துவான் திரு. திருநாவுக்கரசு அவர்கள் ஐயரவர்கள் கல்விகற்ற பாடசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றும் பேறு தமக்குக் கிடைத்தமை திருவருட்செயலே யெனவும் அவர் தமது வயது முதிர்ந்த காலத்திலும் அப்பர்சுவாமிகளைப் போல, சமயப்பணி செய்வது தமிழ்மக்களின் புண்ணியமே எனவும் தங்கள் பாடசாலையில் அவர் சிலகாலம் இலக்கியமும் சைவசமயமும் கற்பித்து வந்தவரெனவும், மேலும் அவருடைய சேவையை வித்தியாசாலை அடைதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யத் தாம் கருதுவதாகவும் கூறினுர்.

பின்பு பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும், திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவர்களும், குன்றக்குடி அவர்களும், முதலியார் செ. மூத்துத்தம்பி அவர்களும், பண்டிதர் திரு. பொ. கிருஷ்ணபிள்ளை அவர்களும் அனுப்பிய ஆசிச்செய்திகள் படிக்கப்பட்டன. தலைவர் அவர்கள் யாவருக்கும் நன்றி கூறியபின் பாராட்டு விழா பூர்த்தியடைந்தது.

——

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

வேலணைகிழக்கு யாழ்ப்பாணம்.
மூத்ததம்பிசதாசிவம் - வழக்காளி,
வழக்கு இல M. B. 3308
எதிராக
வேலணை கிழக்கு யாழ்ப்பாணம்,
1. கணபதிப்பிள்ளை இராமலிங்கம்
2. இராமலிங்கம் பெண்
பாக்கியலெட்சுமி
- எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3308ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக்காணிகள் 1962 ம் வருடம் வைகாசி மாதம் 17ந் திகதி (17-5-62) வியாழக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிகட்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— ரூபா 2365/-ம், 28-3-60 தொடக்கம் 8-11-60வரைக்கும் ரூபா 1500க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்ருக இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 220-60 சதமும், தீர்வைத்தொகையில் ரூபா 1000ம் கோட்டுச் செலவில் ரூபா 100-ம் கட்டப்பட்டுள்ளது,

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், தீவுப்பகுதி, வேலணைக்கோயிற்பற்று, வேலணைகிழக்கிறை "ஆலம்புலத்தில்" நெற்பரப்பு 27, முதபனைகளும். வடலிகளும் எல்லைகிழக்கு பேரம்பலம் பெண் இராசம்மாவின் ஆதனம். வடக்கு நமசிவாயம் பெண் பொன்னம்மாவுக்கும் மற்றையோருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு இரண்டாவது ஆதனம். தெற்கு வேலுப்பிள்ளை பெண் இராசம்மாவுக்கும் மற்றையோருக்குமுரிய ஆதனம். இதடங்கலிலும் சொரியலாக 5/6 பங்கு. C 78/16 -ல் பதியப்பட்டது.

2 ஷெ இறை "ஆலர்புலத்தில்" நெற்பரப்பு 23. எல்லை கிழக்கு முதலாவது காணி. வடக்கு முருகன் நாகமணிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு கதிரவேலு பெண் இராசம்மாவுக்கும் மற்றையோருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு சுப்பிரமணியம் பெண் சிவகாமியம்மைக்கும் பங்காளருககுமுரிய ஆதனங்கள். இதடங்கலும் C 217/119-ல் பதியப்பட்டது.

செ. பாண்டித்துரை,
கொமிஷனருக்விலைமதிப்பாளரும்
ஏலதாரர், தரகர்,
Commissioner of Sales, Valuer
Auctioneer & Broker.
மல்லாகம் 11-4-62,
M 14 11-5-62


## யாழ்ப்பாணம்
## — ஐக்கிய இலாப நிதி —
### 1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும் முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14.  சிருப்பர்.


## தேவை

எங்கள் வவுனியாவிலிருக்கும் "சிவசக்தி" என்னும் வியாபார ஸ்தாபனத்திற்கு ஒரு அதிபர் (மனேச்சர்)தேவை கீழ்க்காணும் தகைமையுள்ளவர் விண்ணப்பிககலாம்.

1, வியாபார அனுபவமுடையவர்,
2. நாற்பது வயதிற்குக் குறையாதவர்.
3. நடைமுறையில் தமிழில் வேலை செய்யக்கூடியவரும் ஆங்கில சிங்கள பாஷைகளில் அநுபவமுள்ளவரும்.
4 ரூபா 1500/- க்குக் குறையாத ரொக்கப் பிணையும், ரூபா. 3500/- ஆதனப் பிணை அல்லது வேறு விதமான பிணையும் கொடுக்கக்கூடியவர்.
5. தகுந்த இருநற்சாட்சிப்பத்திரம்.
6. மற்றும் நிபந்தனைகள் நேரில் அறிந்துகொள்ளலாம்.

உணவு விடுதிவசதிகள் செய்து கொடுக்கப்படும்.

செ. அண்ணுமலை.
பொறுப்பாளர்.
"சிவசக்தி"
வவுனியா, 27-4-62.
M 12 4, 11-5-62.

## வெந்தீஸ் விற்பனை அடைவு நகைகள்

—:—

தா. சி. குமாரசாமி,
576/6 அம்மன் கோவில் ரோட்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

மேற்படி அடைவு கடையில் 1959-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1-ந் திகதி தொடக்கம் 1960 மார்கழி மாதம் 31-ந் திகதிவரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாது தவறியிருக்கும் நகைகள் 1962-ம் ஆண்டு வைகாசி மாதம் 27-ந் திகதி ( 27-5-62 ) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பொ. இராசரத்தினம்,
வெந்தீஸ் மேஸ்தர்
வண் - வட - மேற்கு
ஆனைக்கோட்டை.
M 16 11, 18-5-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி
1. சபாரத்தினம் கதிரவேலு
2, பெண் நாகபூரணம்
-வழக்காளிகள்.
இல. 2182 எதிராக
கெருடாவில் சாவகச்சேரி வடக்கு
சாவகச்சேரி
வல்லிபுரம் சின்னத்துரை
- எதிராளி.

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில் 2182 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1962-ம் ஆண்டு ஜூன் (ஆனி) மாதம் 6ம் திகதி (6-6-62) புதன் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,


தீர்வைத் தொகை: - முதல் வட்டி ரூபா 831-25-ம், இதில் ரூபா 700 க்கு 30-3-61 திகதி தொடக்கம் 17-7-61திகதி வரைக்கும் 100 க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 300-21 சதம்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சாவகச்சேரியிறை "பிள்ளையான் வளவு" நிலப்பரப்பு 24ம் குளி 6-ம் இதில் கிழக்கே நிலப்பரப்பு 9-ம் குளி 3ம் இதில் மேற்கே நிலப்பரப்பு 6 நீக்கி மீகுதி நிலப்பரப்பு மூன்று (3ம்) குளி 3ம் பயிர்களும் எல்லை கிழக்கு ஆறுமுகம் கதிரவேலுவுக்கும் சகோதரனுக்குமுரிய ஆதனம். வடக்கு ரோட்டு. மேற்கு தம்பித்துரை பெண் வள்ளியம்மையின் ஆதனம். தெற்கு கார்த்திகேசு முருகேசுவின் ஆதனம். இதடங்கலும்.

முற்பதிவு F 264/85.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer &
Licensed Auctioneer.
தெல்லிப்பழை, 12-4-1962.
M. 9 11-5-62.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருட்பயன் விளு விடை

ஆசிரியர் சைவப்புலவர் திரு. இ, செல்லத்துரை

## ஒன்பதாம் அதிகாரம்: ஐந்தெழுத்தருள்நிலை

ix. புராணங்கள் யாவை?

வேதப்பொருளை உணர்வதற்கு உறுதுணையான நூல்கள் வேதங்களும் உபாங்கங்களுமாம். இவற்றுள் உபாங்கம் நால்வகை நூல்களைக்கொண்டது. அந்நூல்கள்: ஸ்மிருதி (தருமசாத்திரம்) புராணம் நியாயம், மீமாஞ்சை என்பன. இந்த நால்வகை நூல்களுள் ஒன்றுய புராணம், வேத வேதாந்தங்களின் உட்பொருளை யாவரும் உணருமாறு தெளிவுறுத்துமுகத்தால் பலவகைக்கதைகளாய் அமைந்து நிற்கும். அக்கதைகள் மக்களை அறத்தில் விருப்பும் மறத்தில் வெறுப்பும் கொள்ளுமாறு செய்து நல்வழிப்படுத்துதலே நோக்கமாகவுடையன. இவ்வியல்புடைய புராணங்கள் பதினெட்டு உள. அவை மேல் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1, சைவ புராணம் | 7, வாமனபுராணம் | 13. வைணவ புராணம் |
| 2. பவிடிய புராணம் | 8, மற்சபுராணம் | 14. பாகவத புராணம் |
| மார்க்கண்டேய ,, | 9. கூர்ம புராணம் | 15. பிரம புராணம் |
| இலிங்கபுராணம் | 10. பிரமாண்ட ,, | 16, பத்ம புராணம் |
| (ஸ்)கந்தபுராணம் | 11. காருடபுராணம் | 17. ஆக்கினேயபுராணம் |
| [illegible]ராக புராணம் | 12. நாரதீயபுராணம் | 18. பிரமகைவர்த்த ,, |

இவைகளுள் சைவபுராணம் முதல் பிரமாண்ட புரா[illegible]ம் ஈறுகவுள்ள பத்தும் சிவபுராணங்கள் எனவும், காருட[illegible]ராணம் முதல் பாகவத புராணம் ஈறுகவுள்ள நான்கும் விஷ்ணு புராணம் எனவும். பிரம புராணம் பத்மபுராணம் ஆகிய இரண்டும் பிரமபுராணங்கள் எனவும் கூறுவர். ஏனைய இரண்டனுள் ஆக்கினேயபுராணம் அக்கினியைப் போற்றுவதெனவும் பிரமகைவர்த்தபுராணம் சூரியனைப் போற்றுவதெனவும் கூறுப.

இப்பதினெண்புராணங்களின் வேருக தமிழில் எழுந்த கந்தபுராணம், திருத்தொண்டர் புராணம், திருவிளையாடற்புராணம், தலபுராணங்கள் என்பனவுமுள. இவற்றுள், கச்சியப்பசிவாசாரியார் செய்தருளிய கந்தபுராணம் பதினெண்புராணங்களுள் ஒன்றுய (ஸ்)காந்தபுராணம் என்னும் சிவபுராணத்திலுள்ள ஒரு பகுதியின் மொழிபெயர்ப்பாகும்.

புராணம் என்பதற்கு, பழைய வரலாறு என்று பொருள்கூறுவர். அவ்வரலாறுகள் அங்ஙனம் நிகழ்ந்தனவாயினும், நிகழாதனவாயினும் வேத வேதாந்தங்களில் விதித்தனவற்றைச் செய்வித்தும் விலக்கியனவற்றை ஒழிப்பித்தும் அறவழிப்படுத்தி, ஆன்ம ஈடேற்றம் செய்வனவாய் அமையின் ஏற்றுக்கொள்ளத்தக்கவைகளாம். அங்ஙனமல்லாதன நீக்கத்தக்கவைகளாம். — தொடரும்.

## சக்தி நிறைந்த வாலிபத்தில்,

"வாலிபர்களே! நீங்கள்தான் இந்த நாட்டின் மதிப்புவாய்ந்த, சக்திபெற்ற தேசிய செல்வங்கள் ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அவசியமான ஆக்க சக்திதான் நீங்கள். ஒவ்வொன்றையும் உற்று உணர்வதோடு எதற்கும் ஸ்தாபனரீதியாகச் செயலாற்றப் பழகிக் கொள்ளுங்கள். அப்பொழுது தான் உங்களது திறமையின் பலத்தைத் தெரியும்." இவ்வாறு அண்மையில் நடந்த இணுவில் வாலிபசங்கக் கூட்டத்தில் பேசிய யாழ் - மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச துணைச் செயலாளர் திரு. சி, சண்முகலிங்கம் குறிப்பிட்டார். தொடர்ந்து பேசுகையில்;

அனுபவ முதிர்ச்சியும் சமூக நன்மதிப்பும் எமது செயல் முறைகளைப் பொறுத்தே ஏற்படுபவை. ஆகையால் நேர்மையோடும் ஊக்கத்தோடும் செயலாற்றப் பழகவேண்டும்" என்று கூறினுர். இக்கூட்டத்திற்குச் சங்கத் தலைவர் திரு. செ. செல்வரத்தினம் தலைமைவகித்தார்.

## சைவப் பிரசங்கம்

—o—

நிகழும் சுபகிருது ஞூ சித்திரை மீ 20-ந் உ (3-5-62) வியாழக்கிழமை "மானுடப் பிறவியின்லட்சியம்" என்னும் பொருள் பற்றியும், ஷை மாதம் 19ம் திகதி (2-5-62) புதன்கிழமை "அருட்குரு" என்னும் பொருள்பற்றியும் சரவணை இந்தன் பிள்ளையார் கோயிலில் அராலி தெற்கு சைவப்பிரசாரகர் திரு. வே. கந்தையா அவர்களாற் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன. மேலும் ஷை மாதம் 14ம் திகதி (27-4-62) வெள்ளிக்கிழமை அராலி மேற்கு நொச்சிக்காட்டுப்பிள்ளையார் கோயிலில் ஷை சைவப்பிரசாரகரவர்களால் "அருட்குரு" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது.

மேலே குறிக்கப்பெற்ற இடங்களில் நிகழ்த்தப்பெற்ற பிரசங்கங்கள் நடைபெறுவதற்கு அவ்விடங்களிலுள்ள சைவ சமயஅபிமான இளைஞர்களின் ஊக்கமும் முயற்சிகளும் கடவுட் பக்தியும் மிகவும் பாராட்டத்தக்கதே. இவ்வித சிவபுண்ணியத் தொண்டில் ஈடுபெற்ற அவ்வூர் இளைஞர்களுக்கு இறைவன் அருள் புரிவாராக.

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு க செ, த. செ. செல்லையா பிள்ளை அவர்களின் அடைவு கடையில் 1-4-59 முதல் 31-3-60 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் 7-6-62 வியாழக்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து, மீட்கப்பட்ட நகைகள் பிறநீங்கலாக ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

C. இருநாதன்,
வெந்திஸ் மேஸ்தர்.
195 காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.
M 13 11—5—62,

## தான வரவு

நல்லூர்க் கந்தசுவாமிகோயில் உள்வீதித் திருவுலாவுக்காக, கைலாய வாகனம் உபயம் செய்தவரும், சமயப்பணிகளிலும், கல்வி விடயங்களிலும் ஈடுபட்டு வாழ்ந்து, 11-4-62ல் மறைந்த வருமான அம்மையார் —யாழ்-நாயன்மார்கட்டு தம்பிஐயா பாக்கியம்அவர்களின், 11-5-62 வெள்ளி (இன்று) நிகழும் அந்தியேட்டியை முன்னிட்டு யாழ்-சைவபரிபாலன சபைக்குத் தானமாக ஆ. தியாகராசா அவர்கள் அளித்த ரூ. 2/- நன்றியோடு பெற்றுக்கொண்டோம்.

—அதிபர்.

## கருத்துக் கலசம்

சுதந்திரம் பெறுதற்காகச் செய்த தியாகமும் கடமையும் பெற்ற சுதந்திரத்தையும் நாட்டின் உறுதிப்பாட்டினையும் பாதுகாப்பதற்கும் மிகவும் அவசியமானது.

- ராசன் பாபு.

x x x

நாடகக் கலையில் இயலும் இசையும் அனைத்தும் ஒன்ருகவே இணைந்து காணப்படுகின்றன. ஆகையால் நாடகங்களை நடிப்பதின் மூலம் முத்தமிழையே நாம் வளர்க்கின்ருேம்

செ. இராசதுரை.

## தமிழரசர் காலமும்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

னைத் தன் தலைநகராக்கினுன்." என்றும், (சங்கிலி பக் xiii)

2. "கி. பி. 1344-ல் இலங்கைக்குவந்த ... ... இபின்பத்தூத்தா வட இலங்கையில் ஆரியச்சக்கரவர்த்தி என்னும் அரசன் ஆண்டதாகக் கூறுவான்...... இப்பரம்பரை அரசரின் தலைநகர் சிங்கை (க) நகர் என்பர். இதனைக் கோட்டகமக் கல்வெட்டிலும் காணலாம் என்றும், (ஷை நூல் பக். xxvi) கூறியுள்ளார்.

3. அன்றியும் ஆரியச்சக்கரவர்த்தி பரம்பரை சிங்கை நகரை ஆளும்பொழுது கோட்டை இராச்சியத்தை ஆளும் பராக்கிரமபாகு அரசாண்டான் என்றும், அவன் ஏவலால் சப்புமால் குமரையா என்பவன் யாழ்ப்பாணத்துக்குப் படை எடுத்து வெற்றி கொண்டான் என்றும், இவன் வென்ற அரசன் வைபவமாலையைப் பின்பற்றிச்சொல்லப்போனல் பதினெராவது அரசனுகிய கனகசூரியன் என்றும, இவ் 'இபுன்பத்தூத்தா' இங்குவந்தபோது இருந்த சிங்கைநகர் இராச்சியம் மிகுந்த செல்வச்செழிப்பும் அதிகாரமும், கொண்டதாய் இருந்ததென்றும், அது ஆரியச் சக்கரவர்த்தி பரம்பரை ஒருவரின் ஆட்சியின்கீழ்த்தான் இருந்ததென்றும் சொல்லியவராய் அப்பால் இபுன்பத்தூத்தாவின் கூற்றுகப் பின் வரும் பகுதியை எடுத்துக் காட்டுகிறுர் (தொடரும்)

பண்டிதர் பொ, ஜகந்நாதன்

## வேலணையில் நடை .........

1-ம் பககத் தொடர்ச்சி

தலைமைக்கப்பெற்ற பேராசிரியர் ஐயன்பெருமாள் கோனுர், சாலை இளந்திரையன், கனகசவுந்தரி இளந்திரையன்என்போரும், பண்டிதர் அ. பொன்னுத்துரை, கு. வி. செல்வத்துரை ஆகியோரும் பங்குபற்றுவர்.

2-ம் நாள்: திரு. இராஜ அரியரத்தினம், வித்துவான் இ. சி. சோதிநாதன், கனக செந்திநாதன், ஞானசம்பந்தன், நாவேந்தன், இ. மகாதேவா, செல்வி புஷ்பா செல்வநாயகம் என்போரும் இவர்களோடு கலந்துகொள்வர்.

3-ம் நாள் நிகழ்ச்சிகளில் பிரபல கவிஞர்கள் பத்துப்பேர் கலந்துகொள்ளும் கவியரங்கும், சொற்பொழிவுகளும், [illegible] நடைபெறுவ,

# நல்லைநகர் வயிரவர் பதிகம்

—:0:—

[நவாலியூர் ஸ்ரீ க, சோமசுந்தரப்புலவர் அவர்கள் பாடியது]

(முற்றொடர் - 5)

முத்தனே குமரனே பத்தியுள நெஞ்சிலுதி
மோனமெய்ஞ் ஞானவொளியே
முடுவல்வெம் படையனே பூதப்பி ரேதபை
சாசங்க ளுக்குமுதல்வா
சித்தனே சிவசங்க ரன்தந்த புத்திரா
சிந்துர முகன்சோதரா
சிவகாமி யம்மையிரு கண்குளிர வுலவிவரு
செல்வமே பன்னிருகரத்
தத்தனுர் மூன்புவரு மையனே பலகோடி
யண்டங்க ளைக்காத்தருள்
அமலனே விமலனே யேழையடி யேனையுன்
னரவிந்த பாதமலரில்
வைத்தென்னை யாளவுன் சித்தம திரங்குவாய்
வளமேவு நல்லைநகர்வாழ்
மாதவர்க் கனுகூல வோதுகேத் திரபால
வடுகவயி ரவமூர்த்தியே. 6.

ஆதியும் நடுவுமா யந்தமா யெங்கெங்கு
மாகிநிற் கின்றகருணை
யப்பனே விண்ணப்ப மொன்றுசெப் புவதுண்
டகக்கரித் திட்டவரியை
காதிமாங் கனியிற்பி ழிந்துழி யிழிந்தசெங்
கடல்முழுவ தும்புகுந்தும்
காவருந் தேவர்கா யந்தருங் குருதியங்
கடல்களோ யாதோடியும்
பாதியும் நிறையாத வின்பலிப் பாத்திரம்
பழுதின்றி நிறையவெனது
பழவினைக் கடலையு மடைதிறந் திடுவையேற்
பரமநின் குறையுமெனது
வாதையுந் திருமறை யோதையும் பூசையும்
வழுவாத நல்லைநகர்வாழ்
மாதவர்க் கனுகூல வோதுகேத் திரபால
வடுகவயி ரவமூர்த்தியே, 7. —தொடரும்.

இவ்வாரம் (13-5-62 — 19-5-62)

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

உடல்நிலைக் கோளாறு இவ்வாரமும் இருக்கும். எந்த வழியிலும் மன அமைதி இருக்காது. தொழிலளவில் நல்ல வாரம். பண இலாபங்களும் நிச்சயம், வார இறுதிநாளை எச்சரிக்கையோடு கழிக்கவும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

செலவுகள் பெருகும், வேலையும் வழமையில் அதிகமாயிருக்கும். அயலவரும் அந்நியரும் உதவுவர். வழமையான வேலையில் சில மாற்றமும் உண்டாம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 4,3, திருவாதிரை, புனர்பூசம் 1, 3 4ம் பாதம்.

எதிர்ப்புக்கள், கவலைகளினிடையேயும் உமது முயற்சியில் முன்னேற உம்மால் முடியும். பண இலாபம் நிச்சயம். உடன் பிறந்தோர் உதவிதருவர்.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

குடும்ப விவகாரங்கள் தொடர்ந்து தீர்வுபெறுமலே இருந்துவரும். வீட்டில் உமது எண்ணப்படி நடந்துகொள்ள உம்மால் முடியாதிருக்கும். பணமளவில் ஓரளவு நல்ல வாரம்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

திரும்பவும் ஒரு நல்ல வாரம். உமது சொந்தப்பிரச்சினைகளில் பெரும்பான்மையானவை தீர்வுபெறும். உடல் நிலையும் திருந்த வேண்டும். எதிரிகளுக்கு இன்னலும் நிச்சயம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமுண்டு. உமது உடல்நிலை பற்றி மேலும் சில காலத்திற்கு நீர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தொழிலளவில் ஓரளவு நல்ல வாரம், தந்தைவழி உறவினர் மிக உதவியாக இருப்பர்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

தாய்வழி உறவினர்கள் சற்றுத் தொல்லைதருவர், தாயாரின் உடல் நிலையும் பாதிக்கப்படும். ஆனுல் தொழிலளவில் இந்த வாரமும் தொடர்ந்து சாதகமானதாகவே இருக்கும். வார இறுதியில் உடல் நிலையில் கவனஞ்செலுத்தவும்.

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

விவசாய ஈடுபாடுகள் மூலமான வருமானம் நிச்சயம். தடைகளையெல்லாம் தாண்டிவிட உம்மால் முடியும். ஆனுல் சிறு குடும்பக் குழப்பங்கள் உண்டாம்,

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

இனத்தவருடன் மோதல்களுக்கு இடமுண்டு. உடல்நிலைக்குழப்பங்களும் உண்டாம். வயிற்றுக் கோளாறுகள் ஏற்படும். ஆனுல் உமது தொழில் விவகாரங்களிலுள்ள தடைகளைத் தாண்டிவிட உம்மால் முடியும்.

**மகாராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

ஞாயிறும் திங்கள் காலையும் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும். மிகுதிப்பகுதி வாரம் வியாபார ஈடுபாடுகளுக்கு ஏற்றது. ஆனுல் இனத்தவருடன் மோதல்களுக்கு இடமுண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

வார முதல்நாள் புதிய ஈடுபாடுகளுக்கு ஏற்றது, திங்கள் மாலையையும் செவ்வாய் புதனையும் எச்சரிக்கையோடு கழிக்கவும். வார மிகுதி நாட்கள் திரும்பவும் சாதகமானவையாக மாறும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

உடல்நிலை திருந்த வேண்டும். பண இலாபமும் உண்டாம். புதிய முயற்சிகள் வெற்றிபெறும். வியாழன் வெள்ளியையும் சனி காலையையும் எச்சரிக்கையோடு கழிக்கவும்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில். யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 11-5-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம, சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org